**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**
**அசல் வழக்கு எண்.197/2013**
**CNR NO.TNKR090000852013**

பானுமதி ... வாதி

**/எதிர்/**

1. முத்துசாமி கவுண்டர்
2. சின்னம்மாள் (இறப்பு)
3. சுப்ரமணியம்
4. செந்தில்குமார்
5. சசிகுமார் (Amended as per order in I.A.No.04/2025 Dated.12.08.2025)

... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 16.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.செல்லமுத்து அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், 2ம் பிரதிவாதி இறந்து விட்ட நிலையிலும், 3 முதல் 5 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா சொத்தை வாதி அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்**</u>

1) தாவா சொத்தை வாதியின் தகப்பனார் 06.02.2013 அன்று வாதிக்கு ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி தேதியில் இருந்து வாதி தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறார். வாதியின் தகப்பனாருடன் ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன், முத்துசாமி, சீரங்காயி, சின்னம்மாள் ஆகியோர் உடன்பிறந்தவர்கள். வாதியின் பாட்டனார் பெருமாள் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது ஆண் வாரிசுகளான ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன், முத்துசாமி, மாணிக்கம் ஆகியோர் 1970ல் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டனர். பாகம் பிரிந்தவுடன் ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன் இருவரும் தனியாக சென்று விட்டனர்.

2) வாதியின் தகப்பனாருடன் பிறந்த சீரங்காயி மற்றும் சின்னம்மாள் இருவரும் சுக்கிரன் (எ) அரசப்பகவுண்டர் என்பவரை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்த நிலையில் அவர் இறந்து விட்டதால் சீரங்காயி மற்றும் சின்னம்மாள் இருவரும் தனது சகோதரர் முத்துசாமியுடன் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தனர். முத்துசாமி கவுண்டர் தனக்கு பாகம் மூலம் கிடைத்த சொத்துக்களையும், மாணிக்கத்திற்கு பாகம் மூலம் கிடைத்த சொத்துக்களையும் சேர்த்து விவசாயம் செய்ததில் அதில் வந்த வருமானத்தை கொண்டு 04.07.1975ல் குடும்பத்தில் ஆண் உறுப்பினர் என்ற முறையில் முத்துச்சாமி கவுண்டர் பெயரில் சர்வே எண்.937/3ல் 5 ஏக்கர் 5 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றனர்.

3) மேற்படி நிலத்தை முத்துசாமி கவுண்டர் வாதியின் தகப்பனார் மாணிக்கம் அவரது சகோதரிகள் சீரங்காயி மற்றும் சின்னம்மாள் ஆகியோர்கள் ஒன்றாக அனுபவம் செய்து வந்தனர். பின்னிட்டு 1976ல் வாதியின் தகப்பனாருக்கு திருமணம் நடைபெற்ற பின்னிட்டு மன வேற்றுமை காரணமாக 1981ம் ஆண்டு ஊர் பெரியவர்கள் செய்த வாய்மொழி பாகப்பிரிவினையின் படி முத்துச்சாமிக்கும், மாணிக்கத்திற்கும் பூர்வீக சொத்துக்களில் பாகம் பிரிந்ததை அவரவர் தனியாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்றும் 1974ம் ஆண்டு முத்துச்சாமி பெயரில் கிரையம் வாங்கிய சொத்தான 5 ஏக்கர் 5 செண்ட் நிலத்தை முத்துச்சாமி, மாணிக்கம் இருவரும் தலா ஒரு பாகத்தையும், சீரங்காயி மற்றும் சின்னம்மாள் இருவருக்கும் சேர்த்து ஒரு பாகம் பிரித்துக் கொண்டனர்.

4) வாதியின் தகப்பனாருக்கு பூர்வீக சொத்தில் கிடைத்த பாகத்திற்கு பட்டா எண்.1612, 3173 ஏற்பட்டது. 1975 ல் முத்துச்சாமி பெயரில் கிரையம் வாங்கி 1981 ல் பிரித்துக் கொண்ட சொத்திற்கு வாதியின் தகப்பனார் பெயரில் பட்டா எண்.1629 ஏற்பட்டது. 1 ம் பிரதிவாதிக்கு பிரிந்த சொத்திற்கு பட்டா எண்.1800, சீரங்காயி மற்றும் சின்னம்மாளுக்கு பிரிந்த சொத்துக்களுக்கு சின்னம்மாள் மகன் சுப்ரமணியம் பெயரில் பட்டா எண்.792 ஏற்பட்டது.

5) வாதியின் தகப்பனார் தனக்கு பாகம் பிரிந்த பட்டா எண்.1629 ல் கண்ட சொத்துக்களை நீண்ட காலமாக அனுபவம் செய்து வந்து 06.02.2013 ல் வாதி பெயருக்கு ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். பிரதிவாதிகளுக்கும், தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. பிரதிவாதிகள் தாவா சொத்தை குறைந்த விலைக்கு கேட்டு வற்புறுத்தினார்கள். வாதி கிரையம் செய்ய மறுத்து விட்டதால் வாதி மீது பொறாமை கொண்டு பிரதிவாதிகள் தங்கள் ஆட்களுடன் 15.08.2013 அன்று தாவா சொத்திற்கு வந்து ஆக்கிரமிக்க முயற்சித்தனர். இதை வாதி தடுத்து விட்டார்.

6) பிரதிவாதிகள் ஆள் பலமும், பண பலமும் உடையவர்கள். எனவே அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் தாவா சொத்துக்கள் தங்களுக்கு பாத்தியப்பட்டதாக எதிர் வாதம் செய்துள்ள காரணத்தால் வாதி தாவா சொத்துக்கள் குறித்து விளம்புகை பரிகாரம் கோரி வழக்குரையை திருத்தம் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருந்து சமயத்தில் 2 ம் பிரதிவாதி இறந்து விட்டதால் அவரது வாரிசுகள் 4, 5 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

<u>**1 ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையின் சுருக்கம்**</u>

7) பதிலுரையில் இப்பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க வேண்டும். வாதிக்கு இவ்வழக்கில் கிடைக்கக்கூடிய பரிகாரம் எதுவும் இல்லை. வழக்குரை பத்தி 3 மற்றும் 4 ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது. 06.02.2013 ல் வாதியின் தகப்பனார் வாதிக்கு தாவா சொத்தை தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்து வாதியின் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்வது

பொய்யானதாகும். அவ்வாறு எழுத வாதியின் தகப்பனார் மாணிக்கத்திற்கு எவ்வித உரிமையும் இல்லை.

8) 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்களை தங்களது சகோதரர்களுக்கு இடையே பாகம் பிரிக்கப்பட்டதாக சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையாகும். மேற்படி பாகமானது 45 வருடங்களுக்கு முன்பே பிரிக்கப்பட்டு விட்டது. பாகத்திற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதியின் சகோதரர்கள் ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன் இருவரும் தனியாக வசித்து வருகின்றனர். வாதியின் தகப்பனாரும், இந்த பிரதிவாதியும் ஒன்றாக வசித்ததாக சொல்வது பொய்யாகும். மேலும் 1ம் பிரதிவாதியின் சகோதரர்கள் இப்பிரதிவாதியுடன் வசித்து வந்ததாக சொல்வது பொய்யானதாகும்.

9) இப்பிரதிவாதி கணவரை இழந்த தனது சகோதரிகளுக்கு கருணை அடிப்படையில் உதவி செய்து வந்தார். வாதியின் தகப்பனாரும், 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து சர்வே எண்.937/3ல் 5 ஏக்கர் 5 சென்ட் நிலத்தை கிரையம் வாங்கியதாக சொல்வது பொய்யாகும். 1ம் பிரதிவாதி தனது சொந்த வருமானத்தைக் கொண்டு மேற்படி நிலத்தை ஒரு முத்துச்சாமி என்பவரிடம் இருந்து 04.07.1975ல் கிரையம் வாங்கியுள்ளார். அதில் வாதியின் தகப்பனாருக்கோ, 1ம் பிரதிவாதிக்கோ எவ்வித உரிமையும், பாத்தியமும் கிடையாது. மேற்படி சொத்தை வாதியின் தகப்பனாரும், இந்த பிரதிவாதியும் கூட்டாக அனுபவம் செய்து வந்ததாக சொல்வது பொய்யாகும்.

10) பின்னிட்டு மேற்படி சொத்தை 1981ல் பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்வது பொய்யான சங்கதிகள் ஆகும். வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை 1ம் பிரதிவாதியின் சகோதரர்கள் சுமார் 45 வருடத்திற்கு முன்பாக வாய்மொழியாக பாகம் ஏற்படுத்திக் கொண்டனர். அதன்படி பிரிந்த சொத்துக்களை அவரவர் தனியாக அனுபவம் செய்து வந்தனர். சில சொத்துக்களை தங்களுக்குள் கூட்டாக வைத்துள்ளனர். மேற்படி சொத்துக்களை மேய்ச்சலாக பயன்படுத்தி வருகின்றனர்.

11) இப்பிரதிவாதியும், அவரது சகோதரர்களும் தங்களுக்கு பாகம் பிரிந்த சொத்துக்களை பொறுத்து தனித்தனியாக பட்டா பெற்றுள்ளனர்.

இதில் ஆண்டியப்பன் பட்டா எண்.111ம், பழனியப்பன் பட்டா எண்.1099ம், வாதியின் தகப்பனாருக்கு பட்டா எண்.1612ம், 1ம் பிரதிவாதிக்கு பட்டா எண்.1757ம் ஏற்பட்டுள்ளது. பட்டா எண்.3173ல் உள்ள சில சொத்துக்களைப் பொறுத்து 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்களுக்கு கூட்டாக பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களை 1ம் பிரதிவாதி தனது தனிப்பட்ட சொத்தாக யாருடைய இடையூறும் இன்றி அனுபவம் செய்து வருகிறார்.

12) 04.07.1975ல் 1ம் பிரதிவாதி தனது சொந்த வருமானத்தைக் கொண்டு சர்வே எண்.937/3ல் 5 ஏக்கர் 5 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். 1ம் பிரதிவாதியின் சகோதரர்கள் ஆண்டியப்பன், மாணிக்கம் இருவரும் அவர்களுக்கு பிரிந்த சில சொத்துக்களை இப்பிரதிவாதிக்கு 24.11.1997ல் விற்பனை செய்துள்ளனர். அதே போன்று 04.04.2002 அன்று ஆண்டியப்பன் சர்வே எண்.658/5A நிலத்தை 1ம் பிரதிவாதிக்கு விற்றுள்ளார். சர்வே எண்.937/3 ஆனது உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.937/3A முதல் 3E வரை பிரிக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களுக்கு இப்பிரதிவாதி மட்டுமே முழுமையான உரிமையாளர் ஆவார்.

13) மேற்படி சொத்துக்களில் உரிமையே இல்லாத நபர்கள் எவ்வித ஆவணங்களும் இல்லாமல் தங்கள் பெயரை பட்டாவில் சேர்த்துள்ளனர். எனவே மேற்படி பட்டாவில் இருந்து அவர்கள் பெயரை நீக்கம் செய்ய இப்பிரதிவாதி குளித்தலை வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து முழு விசாரணைக்கு பின்னிட்டு 24.09.2013ல் மேற்படி பட்டாக்களில் இருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டது. தாவா சொத்துக்களுக்கு வாதியின் தகப்பனார் வரி செலுத்தியதாக சொல்லியுள்ளது பொய்யான சங்கதிகள் ஆகும். மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை. தாவா சொத்து முறையாக மதிப்பீடு செய்யப்படவில்லை. வாதிக்கு இவ்வழக்கில் எவ்வித முதல் ஏற்பு நிலையும் இல்லாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

14) இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வழக்கு விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

**<u>எழுவினாக்கள்</u>**

| | |
|---|---|
| 1. | Whether the relationship stated in the plaint is correct as stated? |
| 2. | Whether the plaintiff's predecessor in title has right to settle in favour of the plaintiff? |
| 3. | Whether the family is joint family? |
| 4. | Whether the plaintiff is in exclusive possession and enjoyment of the suit property? |
| 5. | Whether the plaintiff is entitled for a relief of permanent injunction? |
| 6. | To what other relief of plaintiff's entitled? |

15) இரு தரப்பு வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் முக்கிய எழுவினா வனையப்படாமல் விடுபட்டு போய் விட்டது என்பது தெரிய வந்தது. இது குறித்து இரு தரப்பினரிடமும் தெரிவிக்கப்பட்டு பின்வருமாறு எழுவினா வனையப்படுகிறது.

| | |
|---|---|
| 7. | வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? |

16) வாதி தரப்பில் வாதி பானுமதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்களும், 1ம் பிரதிவாதியின் சகோதரர் மாணிக்கம் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.18 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி முத்துச்சாமி பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>எழுவினா எண்கள்.1 மற்றும் 3 ன் தீர்வு</u>**

**வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள உறவு முறை சரியானதா?**

**வாதி சொல்வது போல் கூட்டுக் குடும்பமா?**

17) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வாதி தரப்பில் வாதியின் தகப்பனார் மாணிக்கம், அவரது சகோதரர்களான 1ம் பிரதிவாதி, ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன், சீரங்காயி, சின்னம்மாள் ஆகியோர்கள் உடன்பிறந்தவர்கள் என வாதிடப்பட்டது. மேற்படி உறவு முறை குறித்து 1ம் பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே எழுவினா 1 ஐ

பொறுத்து இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை வேறு எதுவும் இல்லை.

18) வாதி தரப்பில் அவரது தகப்பனார் மாணிக்கமும், மற்ற சகோதரர்களும் தங்களுக்கு இடையே பூர்வீக சொத்துக்களை 1970ல் பாகம் பிரித்துக் கொண்டதாகவும் பின்னிட்டு ஆண்டியப்பன், பழனியப்பன் இருவரும் தனியாக சென்று விட்டதாகவும், வாதியின் தகப்பனார் மாணிக்கம் தனது சகோதரரான 1ம் பிரதிவாதியுடன் ஒரே குடும்பமாக வசித்து வந்ததாகவும், அவர்களுடன் தங்களது சகோதரிகளான சீரங்காயி, சின்னம்மாள் இருவரும் ஒன்றாக வசித்து வந்ததாகவும் வாதிடப்பட்டது.

19) 1ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி வாதத்திற்கு ஆட்சேபிக்கப்பட்டு வாதியின் தகப்பனார் மாணிக்கம் திருமணமான பின்னிட்டு தனியாக சென்று விட்டதாகவும் 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டது. இது குறித்து 1ம் பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "பாகம் பிரித்த கால கட்டத்தில் எனது தம்பி மாணிக்கத்திற்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். மூத்தவர் என்ற முறையில் நான் தான் குடும்ப பொறுப்புகளை கவனித்தேன் என்றால் சரிதான். எனது சகோதரிகளின் கணவர் அரசப்பன் இறந்த பின்னிட்டு, எனது சகோதரிகள் இருவரும் எங்களுடன் வசித்தனர் என்றால் கொஞ்ச நாட்கள் இருந்தார்கள், பிறகு சென்று விட்டார்கள். நான், எனது தம்பி மாணிக்கம், சகோதரிகள் சீரங்காயி, சின்னம்மாள் அனைவரும் ஒரே குடும்பமாக வசித்தோம் என்றால் இருந்தோம்" என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தில் இருந்து வாதியின் தகப்பனார் 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய சகோதரர்கள் சிறிது காலம் ஒரே குடும்பமாக வசித்து உள்ளார்கள் என்பதை 1ம் பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொண்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. எனவே எழுவினா 1 மற்றும் 3 வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

**<u>எழுவினா எண்கள்.2, 4 மற்றும் 7 ன் தீர்வு</u>**

**வாதியின் முன்னோருக்கு தாவா சொத்தை வாதிக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுக்க உரிமை உள்ளதா?**

**வாதி தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருக்கிறாரா?**

**வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?**

20) வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தாவா சொத்தானது வாதியின் தகப்பனார் மாணிக்கத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றும், வாதியின் தகப்பனார் மாணிக்கமும், அவரது சகோதரர்களான முத்துச்சாமி, ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன் சகோதரிகள் சீரங்காயி, சின்னம்மாள் ஆகியோர்கள் ஒன்றாக வசித்து வந்து மாணிக்கத்தின் தகப்பனார் இறந்த பின்னிட்டு குடும்ப சொத்துக்களை ஆண் வாரிசான ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன், முத்துச்சாமி, மாணிக்கம் ஆகியோர்கள் 1970ல் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டதாகவும், அதன் பின்னிட்டு ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன் இருவரும் தங்களுக்கு பிரிந்த பாக சொத்துக்களுடன் தனியாக சென்று விட்டதாகவும், வாதியின் தகப்பனார் மாணிக்கம் திருமணம் ஆகாமல் இருந்ததால் தனது அண்ணன் முத்துச்சாமியுடன் ஒன்றாக வசித்து வந்ததாகவும், மாணிக்கத்தின் சகோதரிகள் இருவரும் ஒரே நபரை திருமணம் செய்து அவர் இறந்து விட்டதால் அவர்களும் முத்துச்சாமியுடன் ஒன்றாக வசித்து வந்ததாகவும் மேற்படி நபர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டுக் குடும்பமாக இருந்து உழைத்து அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு 04.07.1975ல் குடும்பத்தின் மூத்த ஆண் வாரிசு என்ற முறையில் 1ம் பிரதிவாதி பெயரில் 5 ஏக்கர் 5 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றதாகவும், பின்னிட்டு வாதியின் தகப்பனார் திருமணமாகி சென்று விட்டதாகவும், மன வேற்றுமை காரணமாக 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெற்ற சொத்தை 1ம் பிரதிவாதியும், வாதியின் தகப்பனாரும், அவரது சகோதரிகளும் வாய்மொழியாக 1981ம் வருடம் பாகம் பிரித்துக் கொண்டதாகவும் வாதி தகப்பனாருக்கு கிடைத்த 1 ஏக்கர் 68 சென்டிற்கு அவர் பெயரில் தனியாக பட்டா எண்.1629 ஏற்பட்டதாகவும், மேற்படி சொத்தை வாதி 06.02.2013ல் வாதிக்கு தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்ததாகவும் வாதி தரப்பில் வாதிடப்பட்டது.

21) மேற்படி வாதத்தை நிரூபிக்க வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1– 06.02.2013ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதியின் தகப்பனார் மாணிக்கம் தனக்கு பூர்வீக சொந்தமானதும் தன் பெயரில் பட்டா எண்.1629 ஏற்பட்ட நிலத்தை வாதிக்கு தானமாக கொடுப்பதாக கண்டு சர்வே எண்.937/3Bல் 74 சென்ட் நிலமும், சர்வே எண்.937/3Dல் 94 சென்ட்

நிலமும் மொத்தம் 1 ஏக்கர் 68 சென்ட் நிலத்தை தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார்.

22) வா.சா.ஆ.2–1ம் பிரதிவாதி பெயரில் 04.07.1975ல் பெறப்பட்ட கிரைய ஆவணத்தின் பதிவு நகல். வா.சா.ஆ.3–தாவா சொத்திற்கு வாதியின் தகப்பனார் மாணிக்கத்தின் பெயரில் ஏற்பட்ட பட்டா. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனார் மாணிக்கத்திற்கு பாத்தியப்பட்டு அவர் வரி செலுத்தி அனுபவம் செய்து வந்ததாகவும் பின்னிட்டு வாதிக்கு வா.சா.ஆ.1 மூலம் தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்ததாகவும் வாதி தரப்பில் வாதிடப்பட்டது.

23) 1ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்து அதனுடன் சேர்ந்த இதர சொத்துக்களும் 1ம் பிரதிவாதி பெயரில் 04.07.1975ல் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி கிரைய தொகையானது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வருமானத்தில் செலுத்தப்பட்டது என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.937/3ல் 5 ஏக்கர் 5 சென்ட் நிலமானது 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றும், மேற்படி சொத்துக்களில் 1ம் பிரதிவாதியை தவிர வாதிக்கோ, அவரது தகப்பனாருக்கோ, 1ம் பிரதிவாதியின் மற்ற சகோதர, சகோதரிகளுக்கோ எவ்வித உரிமையோ, பாத்தியமோ இல்லை என வாதிடப்பட்டது.

24) மேற்படி வாதத்தை நிரூபிக்க பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1ம் பிரதிவாதி தரப்பில் தங்களது பூர்வீக சொத்துக்கள் குறித்து 1ம் பிரதிவாதிக்கும், அவரது மற்ற சகோதரர்களுக்கும் இடையே சுமார் 45 வருடங்களுக்கு முன்பாகவே வாய்மொழி பாகம் ஏற்பட்டு விட்டது என்றும், அன்றைய தேதியில் இருந்து அனைவரும் தங்கள் பாக சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வருவதாகவும், பின்னிட்டு 1ம் பிரதிவாதி தனது சுய வருமானத்தை கொண்டு தாவா சொத்துக்களை கிரையம் பெற்றதாகவும் அதில் வாதியின் தகப்பனாருக்கு எவ்வித உரிமையும் இல்லை என வாதிட்டார்.

25) மேற்படி சங்கதிகளை நிரூபிக்க பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்கையில், பி.சா.ஆ.1–1ம் பிரதிவாதியின் சகோதரர் ஆண்டியப்பன் பெயரில் பூர்வீக சொத்துக்கள் குறித்து ஏற்பட்ட தனிப்பட்டா எண்.111. பி.சா.ஆ.2–1ம் பிரதிவாதியின் சகோதரர் பழனியப்பன் பெயரில் ஏற்பட்ட பட்டா எண்.1099. பி.சா.ஆ.3–வாதியின் தகப்பனார் மாணிக்கம் பெயரில் பூர்வீக சொத்துக்களுக்கு ஏற்பட்ட பட்டா எண்.1612. பி.சா.ஆ.4–1ம் பிரதிவாதி பெயரில் பூர்வீக சொத்துக்கள் குறித்து ஏற்பட்ட பட்டா எண்.1757. பி.சா.ஆ.5–மேற்படி 4 நபர்கள் பெயரிலும் ஏற்பட்ட பொதுவான சொத்துக்கள் குறித்து பட்டா எண்.3173 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

26) மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கும், அவரது மற்ற சகோதரர்களுக்கும் இடையே சுமார் 45 வருடங்களுக்கு முன்பாகவே பாகம் பிரிக்கப்பட்டு தனித்தனியாக பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியால் வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் கிரையம் பெறப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும் வாதிடப்பட்டது.

27) இரு தரப்பிலும் தாவா சொத்துக்களானது 1ம் பிரதிவாதி பெயரில் வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் கிரையம் பெறப்பட்டுள்ளது என்ற சங்கதிகள் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வாதியின் தகப்பனாருக்கும், 1ம் பிரதிவாதி மற்றும் மற்ற சகோதரர்களுக்கும் இடையே 1970 க்கு முன்பே வாய்மொழி பாகம் ஏற்பட்டு விட்டது என்ற சங்கதிகளும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

28) இவ்வழக்கில் வா.சா.ஆ.2ல் கண்ட கிரைய தொகையானது யாரால் செலுத்தப்பட்டது என்பது குறித்து தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சனை ஆகும். இது குறித்து வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 1ம் பிரதிவாதிக்கு முத்துச்சாமி, கந்தசாமி, ராமசாமி மற்றும் துரைசாமி ஆகியோர்கள் தங்கள் குடும்ப நபர்களுடன் சேர்ந்து சர்வே எண்.937/3ல் 5 ஏக்கர் 5 சென்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளனர். மேற்படி ஆவணத்தில் கிரைய தொகையானது ரூ.2,500/– நிர்ணயிக்கப்பட்டு மேற்படி தொகை கிரையம் கொடுத்தவர்களால் ஏற்கனவே தங்களுடைய குடும்ப செலவிற்காகவும், கிரையதாரர்களில் 1ம் நபரான முத்துசாமியின் மனைவிக்கு வைத்திய

செலவிற்காகவும், விவசாய அபிவிருத்திக்காகவும், ரூ.2,500 பெறப்பட்டு விட்டது என்றும், இன்று முதல் தாங்களே சர்வ விற்கிரையங்களுக்கு யோக்கியமாய் அனுபவித்துக் கொள்ள வேண்டுமென கண்டு கிரையம் செய்யப்பட்டுள்ளது.

29) 1ம் பிரதிவாதியின் சகோதரர்களும், வாதியின் தகப்பனாரும் சேர்ந்து கிரைய தொகை செலுத்தி இருந்தால் அது குறித்து மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டிருக்கும் என்றும் ஆனால் அவ்வாறு எந்த ஒரு சங்கதிகளும் மேற்படி ஆவணத்தில் சொல்லப்படவில்லை என 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டது.

30) மேலும் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதியின் சகோதரரான மாணிக்கம் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில், "ராசு (எ) ஆண்டியப்பன், பழனியப்பன், முத்துச்சாமி மற்றும் எனக்கு தனித்தனியாக பட்டா உள்ளது என்றால் சரிதான். பட்டாவில் உள்ள நிலங்களை அவரவர் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்து யாரிடம் இருந்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் பெயர் ஞாபகம் இல்லை. எந்த வருடம் கிரையம் பெறப்பட்டது என்றால் 1975ல் கிரையம் வாங்கப்பட்டது. தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு ஒப்பந்தம் செய்து கொண்டோமா என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்தம் யார், யார் செய்து கொண்டது என்றால், அது பற்றி எனது அண்ணன் முத்துச்சாமிக்குத் தான் தெரியும். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். அப்போது எனக்கு சிறுவயது. தற்போது எனக்கு 79 வயது. நான் 1947ல் பிறந்தேன். பணம் கொடுத்தது முத்துச்சாமி தான் கொடுத்தாரா என்றால், சீரங்காயி, முத்துச்சாமி இருவரும் கொடுத்தார்கள். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் யார், யார் சாட்சி கையெழுத்து போட்டோம் என தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். குடும்ப பொறுப்புகளை அவர்கள் தான் பார்த்தார்கள். நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பே எனக்கும், எனது சகோதரர்களுக்கும் தனித்தனியாக பட்டா இருந்தது என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் இருந்தது. அந்த சொத்துக்களை தனித்தனியாக அவரவர் அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். கிரையம் ஏற்படுவதற்கு முன்பு சுமார் 10 வருடங்களாக பூர்வீக சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

31) மேலும் இவர் தனது குறுக்கு விசாரணையில், "என் பெயரில் இருந்த பட்டா நிலங்களை நானும், முத்துச்சாமி அவர் பெயரில் இருந்த பட்டா நிலங்களை அவரும் தனியாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். எனக்கு எவ்வளவு சொத்துக்கள் பிரிந்தது என்றால் சுமார் 3–1/2 ஏக்கர் பிரிந்தது. முத்துச்சாமிக்கு 90 சென்ட் நிலத்தையும், பழனியப்பனுக்கு 70 சென்ட் நிலத்தையும் கொடுத்தேன். நான் முத்துச்சாமிக்கும், பழனியப்பனுக்கும் விற்பனை செய்தது வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு முன்பா அல்லது பின்பா என்றால் முன்பே விற்றுவிட்டேன். தாவா சொத்தின் சர்வே எண்.937/3B, 937/3D குறித்து முத்துச்சாமியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்து குறித்து முத்துச்சாமி எனக்கு ஏதாவது ஆவணம் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை. நான் குடியிருக்கும் வீடு எனக்கு பாகம் மூலம் கிடைத்ததா என்றால் ஆமாம். முத்துச்சாமி குடியிருக்கும் வீடு அவருக்கு பாகம் மூலம் கிடைத்தது. வா.சா.ஆ.2 ஏற்படுவதற்கு சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நானும், முத்துச்சாமியும் தனித்தனி வீட்டில் வசித்தோம் என்றால் சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார்.

32) மேற்படி சாட்சியத்தின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில், வாதியின் தகப்பனாரும், 1ம் பிரதிவாதியும் தங்கள் பூர்வீக சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வந்துள்ளனர் என தெரிகிறது. மேலும் வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்திற்கு கிரைய தொகையை வாதியின் தகப்பனார் கொடுக்கவில்லை என்பதை அவரே தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

33) மேலும் மேற்படி கிரையம் நடந்த தேதியில் தனக்கு சிறு வயது என ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். அதை போன்று வா.சா.ஆ.2 கிரையம் ஏற்படுவதற்கு முன்பே தனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்பனையும் செய்துள்ளார். மேற்படி சங்கதிகளில் இருந்து வாதியின் தகப்பனார் தனக்கு பாகமாக கிடைத்த சொத்துக்களை வா.சாஆ.2 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பே தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

34) மேலும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் போது அவர் சிறு வயதாக இருந்த காரணத்தால் வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுவதற்கு கிரைய தொகை எதையும் அவர் கொடுக்கவில்லை என்பதையும், மேற்படி சாட்சியத்தில்

இருந்து அறிய முடிகிறது. எனவே வா.சா.ஆ.2 கிரையமானது 1ம் பிரதிவாதி முத்துச்சாமியால் அவரது தனிப்பட்ட வருமானத்தை கொண்டு பெறப்பட்டுள்ளது என 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்டது ஏற்கத்தக்கதாக உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

35) வாதி தரப்பில் தாவா சொத்துக்களானது தனது தகப்பனார் பெயருக்கு தனியாக பட்டா ஏற்பட்டு தனது தகப்பனாரால் 1987, 1988, 1989, 1990, 1993, 1994, 1997, 2009, 2012 ஆகிய தேதிகளில் வரி செலுத்தி அனுபவம் செய்து வந்ததாகவும் எனவே தாவா சொத்துக்களை தனது தகப்பனார் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்திருந்ததாக வாதி தரப்பில் வாதிடப்பட்டது. மேற்படி வாதத்திற்கு ஆதரவாக மேற்படி வாதியின் தகப்பனாரால் செலுத்தப்பட்ட தீர்வை இரசீதுகள் ஆனது வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

36) மேற்படி வரி இரசீதுகளை பார்வையிடுகையில், தாவா சொத்துக்களுக்கு உண்டான பட்டாவானது 1629 உடன் சேர்த்து வேறு சில சொத்துக்களுக்கும் வாதியின் தகப்பனார் மாணிக்க கவுண்டர் தீர்வை செலுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி வரி இரசீதுகள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டது. மேலும் வாதியின் தகப்பனார் மாணிக்கத்தின் பெயரில் உள்ள பட்டா குறித்து 1ம் பிரதிவாதி தரப்பில் குளித்தலை, வருவாய் கோட்டாட்சியரிடம் ஆட்சேபனை செய்து மனு கொடுத்து மேற்படி பட்டா ரத்து செய்யப்பட்டு தாவா சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி பெயரிலேயே பட்டா ஏற்பட்டுள்ளது என 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டது.

37) மேற்படி வாதத்திற்கு ஆதரவாக பி.சா.ஆ.6–மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை உத்தரவானது குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் 24.09.2013ல் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக வாதியின் தகப்பனார் மாணிக்கம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

38) மேற்படி ஆவணத்தில் 1ம் பிரதிவாதி முத்துச்சாமி தனக்கு 04.07.1975ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு உண்டான பட்டாவானது உட்பிரிவு செய்யப்பட்டு தனது சகோதரர்கள் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டு உள்ளது என்றும், ஆனால் மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள 5 ஏக்கர் 5 சென்ட் நிலம் முழுவதும் தனது அனுபவத்திலேயே இருந்து வருகிறது என்றும், தான் யாருக்கும் நிலங்களை விற்பனை செய்யவில்லை என்றும், எனவே மேற்படி பட்டாக்களில் உள்ள பெயரை நீக்கம் செய்ய வேண்டுமென மனு கொடுத்ததில் குளித்தலை, வருவாய் கோட்டாட்சியர் விசாரணை செய்து சர்வே எண்.937/3A முதல் 937/3E வரையிலான நிலங்கள் முழுவதும் மனுதாரர் முத்துச்சாமிக்கு சொந்தமானது என்றும், அதில் ஏற்பட்டுள்ள பட்டாக்களை நீக்கம் செய்து மனுதாரர் முத்துச்சாமிக்கு பாத்தியப்பட்ட பட்டா எண்.1800 ல் சேர்த்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

39) மேற்படி உத்தரவை எதிர்த்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து அம்மேல்முறையீட்டில் இவ்வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்படி மேல்முறையீடு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் உற்று நோக்கையில் கிராம நிர்வாக அலுவலர் புல தணிக்கை செய்து சர்வே எண்.937/3 ல் உள்ள 5 ஏக்கர் 5 சென்ட் நிலம் முழுவதும் 1ம் பிரதிவாதி முத்துச்சாமி சுவாதீனத்தில் இருப்பதாக அறிக்கை தாக்கல் செய்ததன் அடிப்படையில் குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் அவர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்துள்ளார்.

40) மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.937/3 ஆனது 5 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றும் அது 1ம் பிரதிவாதி முத்துச்சாமி, மாணிக்கம், ஆறுமுகம் மற்றும் சுப்ரமணியன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. வாதி தரப்பில் வா.சா.ஆ.2 கிரைய ஆவணமானது வாதியின் தகப்பனார் மற்றும் 1ம் பிரதிவாதி அவரது சகோதரர்களின் கூட்டு வருமானத்தில் கிரையம் வாங்கப்பட்டது என்றும் அதை 3 சம பாகமாக பிரித்து 1ம் பிரதிவாதி மற்றும் வாதியின் தகப்பனாருக்கு தலா ஒரு பாகமும், 1ம் பிரதிவாதியின் சகோதரிகளான சீரங்காயி, சின்னம்மாள் இருவருக்கும் சேர்த்து ஒரு பாகமும் பிரிக்கப்பட்டதாக வாதிடப்பட்டது.

41) அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கும், வாதியின் தகப்பனாருக்கும் தலா 1 ஏக்கர் 68 செண்ட் நிலமும் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டது என வாதிடப்பட்டது. ஆனால் பி.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், சர்வே எண்.937/3A ஆனது 5 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதில் சர்வே எண்.937/3A–0.31.50 ஹெக் நிலமானது 1ம் பிரதிவாதி பெயரிலும், சர்வே எண்.937/3B–0.30.0 ஹெக்., சர்வே எண்.937/3D–0.38.0 ஹெக். வாதியின் தகப்பனார் பெயரிலும், சர்வே எண்.937/3C–0.31.0 ஹெக். ஒரு ஆறுமுகம் பெயரிலும், சர்வே எண்.937/3E–0.74.0 ஹெக். 3ம் பிரதிவாதி பெயரிலும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

42) உண்மையில் வாதி தரப்பில் வாதிட்டது போல வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் 3 சம பாகங்களாக பிரிக்கப்பட்டிருந்தால் வா.சா.ஆ.2ல் கிரையம் பெற்றவரான 1ம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் 68 செண்ட் நிலமானது பட்டா மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வாதியின் தகப்பனாருக்கு மட்டுமே 1 ஏக்கர் 68 செண்ட் நிலமும், அவரது சகோதரியின் மகளான சுப்ரமணியன் என்பவருக்கு 1 ஏக்கர் 83 செண்ட் நிலமும் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. மேலும் ஆறுமுகம் என்பவர் பெயரில் சர்வே எண்.937/3Cல் 0.31.0 ஹெக். நிலம் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து வாதி தரப்பில் எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

43) வாதி தரப்பில் சொல்வதை போல சம பாகங்களாக சர்வே எண்.937/3ல் உள்ள சொத்துக்கள் பிரிக்கப்படவில்லை என்பது மேற்படி ஆவணத்தில் இருந்து அறிய முடிகிறது. 1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.2ல் கண்ட கிரைய சொத்துக்கள் முழுவதையும் தான் அனுபவம் செய்து வருவதாகவும் அதனால் அதில் ஏற்பட்ட பட்டா மாற்றம் குறித்து தனக்கு தெரியவில்லை என்றும், பின்னிட்டு தெரிந்த உடன் அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்ததாகவும் வாதிடப்பட்டது.

44) மேலும் வாதியின் தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்கள் சேர்ந்து 1ம் பிரதிவாதியை ஏமாற்றி மோசடியாக பட்டா மாற்றம் செய்துள்ளதாக 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்டது ஏற்கத்தக்கதாக உள்ளது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களின் அடிப்படையிலும்,

பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்தள்ள பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 வரையிலான பட்டாக்களின் அடிப்படையிலும் பரிசீலனை செய்கையில், வாதியின் தகப்பனார் தனக்கு பிரிந்த பூர்வீக சொத்துக்களை தனியாக அனுபவம் செய்து வந்துள்ளார் என்பதையும், 1ம் பிரதிவாதி அவருக்கு பிரிந்த பாக சொத்துக்களை தனியாக அனுபவம் செய்து வந்ததாகவும், வா.சா.ஆ.2ல் கண்ட சொத்துக்களை 1ம் பிரதிவாதி தனது சொந்த வருமானத்தை கொண்டு கிரையம் பெற்றுள்ளார் என்பதையும் அறிய முடிகிறது.

45) வாதியின் தகப்பனாருக்கு தாவா சொத்தில் பாத்தியம் உள்ளது என காட்ட வாதி தரப்பில் எந்த விதமான உரிமை ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையிலேயே வாதியின் தகப்பனார் தாவா சொத்தில் உரிமை உள்ளதாக வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார். வருவாய்துறை ஆவணங்களும், பதிவுகளும் ஒரு நபருக்கு உரிமை மூலத்தை கொடுக்காது. எனவே தாவா சொத்துக்களில் வாதியின் தகப்பனாருக்கு எவ்வித உரிமையோ, பாத்தியமோ இல்லை என 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்டது ஏற்கத்தக்கதாக உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

46) வாதியின் தகப்பனார் தனக்கு உரிமையே இல்லாத சொத்து குறித்து 1ம் பிரதிவாதி வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து விசாரணை நடந்து வந்த நிலையில் மேற்படி விசாரணையை தெரிந்து கொண்டே தனது மகளான வாதி பெயருக்கு 06.02.2013ல் வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. எனவே தாவா சொத்துக்களை வாதியின் தகப்பனார் தனக்கு உரிமையே இல்லாமல் வாதி பெயரில் தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

47) மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் வாதி தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருவதாக வாதிடும் நிலையில் தனது சுவாதீனத்தை நிரூபிக்க இவ்வழக்கில் எந்த விதமான ஆவணங்களோ, 3ம் நபர் சாட்சிகளோ தாக்கல் செய்யவில்லை. எனவே தாவா சொத்தின் சுவாதீனத்தில் வாதி இருந்து வருவதாக சொல்லியுள்ள சங்கதிகளை வாதி முறையாக நிரூபிக்கவில்லை என எழுவினா 4க்கு தீர்வு காண்கிறேன். தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ளது என தீர்வு

கண்டுள்ள நிலையில் தாவா சொத்துக்கள் குறித்து வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரமானது அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என மேற்படி விவாதங்களின் அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது.

**<u>எழுவினா எண்.5 ன் தீர்வு</u>**

**வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?**

48) வாதி தரப்பில் தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் வாதி இருந்து வருவதாகவும், பிரதிவாதிகள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து 15.08.2013 ல் வாதியிடம் தாவா சொத்தை விலைக்கு கேட்டதாகவும், வாதி கொடுக்க மறுத்து விட்டதால் தனது ஆட்களுடன் பலாத்காரமாக தாவா சொத்தை ஆக்கிரமிக்க முயற்சித்ததாக வாதிடப்பட்டது. மேற்படி வாதத்திற்கு ஆதரவாக வாதி தரப்பில் 3 ம் நபர் சாட்சிகளோ, ஆவணங்களோ எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேலே கண்ட எழுவினாவிலேயே வாதி தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என முடிவு செய்துள்ள நிலையில் உரிமை இல்லாத நபர் தாவா சொத்தின் உரிமையாளருக்கு எதிராக கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து மேற்படி எழுவினா 5 ற்கு தீர்வு காண்கிறேன்.

**<u>எழுவினா எண்.6 –ன் தீர்வு</u>**

**வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

49) வாதி இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்துள்ள நிலையில் வாதிக்கு இவ்வழக்கில் கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் இல்லை என முடிவு செய்து மேற்படி எழுவினா எண்.6 ற்கு தீர்வு காண்கிறேன்.

**முடிவாக,**

இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம்

செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI Date: 2026.03.24 05:13:32 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 பானுமதி (வாதி)

வா.சா.2 மாணிக்கம் (1 ம் பிரதிவாதியின் சகோதரர்)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 06.02.2013 | தானசெட்டில்மெண்ட் ஆவணம் (7 பக்கங்கள்) | அசல் |
| வா.சா.ஆ.2 | 04.07.1975 | கிரைய ஆவணம் | பதிவு நகல் |
| வா.சா.ஆ.3 | 16.08.2013 | பட்டா எண்.1629 | உண்மை நகல் |
| வா.சா.ஆ.4 | 14.05.2013 | பட்டா எண்.1800 | உண்மை நகல் |
| வா.சா.ஆ.5 | 14.05.2013 | பட்டா எண்.792 | உண்மை நகல் |
| வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.16 | – | சொத்து வரி இரசீதுகள் | அசல் |
| வா.சா.ஆ.17 | 01.02.2013 | 01.01.1987 முதல் 30.01.2013 வரையிலான வில்லங்க சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.18 | – | மாணிக்கத்தின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

பி.சா.1 – முத்துச்சாமி கவுண்டர் (1 ம் பிரதிவாதி)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 13.02.2014 | பட்டா எண்.111 | உண்மை நகல் |
| பி.சா.ஆ.2 | 13.02.2014 | பட்டா எண்.1099 | உண்மை நகல் |
| பி.சா.ஆ.3 | 13.02.2014 | பட்டா எண்.1612 | உண்மை நகல் |
| பி.சா.ஆ.4 | 13.02.2014 | பட்டா எண்.1757 | உண்மை நகல் |
| பி.சா.ஆ.5 | 13.02.2014 | பட்டா எண்.3173 | உண்மை நகல் |
| பி.சா.ஆ.6 | 02.05.2018 | கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் செயல்முறைகள் | சார்வு நகல் |

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.24 05:13:38 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

*******************************
**PDM COURT, KULITHALAI**

**FAIR JUDGMENT**

**O.S.No.197/2013**

**D.D.24.03.2026**

**AFT**

****************************